யாவது தற்போதே அந்த சமுதாயக் நலக் கூடம் கட்ட அனுமதி கேட்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : இது வருவாய்த் துறை பற்றிய கேள்வியாக இருப்பதால் இதை வருவாய்த் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 456, திரு. ஆ. சுப்புரத்தினம், இருக்கையில் இல்லை.

வினா எண். 457, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

457—

செம்பனார் கோவில் ஒன்றியத்தில் மீனவர்களுக்கு வீடு கட்டுதல்.

*15202— திரு. எம். பூராசாமி :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, கடற்கரையோர செம்பனார் கோவில் ஒன்றியத்தை மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் சேர்க்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சேர்க்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி கடற்கரையோரம் 30 கி.மீ. தூரம் உள்ள தொகுதி, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் 20,000-க்கும் அதிகமான மீனவர்கள் வாழ்கின்ற தொகுதி. அங்கே ஏழையெளிய மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுக்கு பூம்புகாரிலிருந்து சந்திரப்பாடி வரை 12 பஞ்சாயத்துகளும்

ஊராட்சிகளும், உள்ளன. கடற்கரையோரமுள்ள அவர்களுக்கு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் வீடு கட்டும் திட்டத்தை வருகின்ற நிதியாண்டிலாவது? அமைச்சர் அவர்கள் சேர்ப்பற்தகு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்,

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதற்காகத்தான் பூம்புகார் தொகுதியிலே பட்டுகள் தங்குவதற்கு. தங்கும் இடவசதியை தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அமைக்க உத்திரவிட்டுள்ளார்கள், மீனவர்கள் வீடு கட்டுவதற்கு தேவையான அளவிற்கு 3 சென்ட் நிலம் வீதம் இலவசமாக அரசுக்கு வழங்கும் பட்சத்தில். வருகின்ற நிதியாண்டில் 1993-94 ஆம் ஆண்டைப் பொறுத்த மட்டில், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இரண்டாயிரம் வீடுகள் ரூபாய் 5.5 கோடி செலவில் கட்டுவதற்கு உத்திரவிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையிலே அவர்கள் அரசுக்கு இலவசமாக மூன்று சென்ட் நிலம் தரும் பட்சத்தில் இது வரும் நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மூன்று சென்ட் நிலத்தை ஒப்படைக்கத் தயாராக இருக்கிறார்கள். ஏராளமான அரசு நிலங்கள் அங்கே இருக்கின்றன, அதை வாங்கிக் கொடுப்பதற்கு நானும் தயாராக இருக்கிறேன். ஆகவே. வருகின்ற நிதியாண்டில் அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது குறித்து ஏற்கனவே நான் விளக்கமாகத் தெரிவித்திருக்கிறேன், இருப்பினும் மீண்டும் ஒரு முறை சொல்கிறேன், அவர்கள் மூன்று சென்ட் நிலம் இங்கு இருக்கிறது என்பதை திட்டவட்டமாக, தெளிவாக, சர்வே நம்பருடன் குறிப்பிட்டு சொன்னால் அந்த இடத்தில் மீனவர்களுக்கு இலவசமாக வீடு தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 458. திரு. கே. செல்வராஜ், இருக்கையில் இல்லை, திரு. வி. பி. சந்திரசேகர் கேட்கிறார், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்,

TRUTH ALONE TRIUMPHS